**7ஆம் வகுப்பு** **கணிதம்**

# அளவைகள்

## I. கொள்குறி வகை வினாக்கள்

1. ஒரு இணைகரத்தின் அடிப்பக்கம் மற்றும் உயரம் முறையே 12செமீ மற்றும் 9 செ.மீ எனில், அதன் பரப்பளவு__________

(i) 102 ச.செ.மீ (ii) 56 ச.செ.மீ (iii) 108 ச.செ.மீ (iv) 40 ச.செ.மீ

2. ஒரு இணைகரத்தின் மூலைவிட்டங்கள் சமம் மற்றும் ஒன்றையொன்று இரு சமக் கூறிடுகின்றன எனில், அது __________வடிவமாகும்.

(i) சதுரம் (ii) செவ்வகம் (iii) சாய்சதுரம் (iv) சரிவகம்

3. ஓர் இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று இருசமக் கூறிட்டு செங்குத்தாக வெட்டிக்கொள்ளும் மற்றும் சமம் எனில், அது __________ வடிவமாகும்.

(i) சதுரம் (ii) செவ்வகம் (iii) சாய்சதுரம் (iv) சரிவகம்

4. ஒரு சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களின் நீளங்கள் முறையே 13 செ.மீ மற்றும் 16 செ.மீ எனில் அதன் பரப்பளவு__________

(i) 104 ச.செ.மீ (ii) 53 ச.செ.மீ (iii) 208 ச.செ.மீ (iv) 140 ச.செ.மீ

5. சாய்சதுரத்தின் அடிப்பக்கம் மற்றும் உயரம் முறையே 12 செ.மீ மற்றும் 5 செ.மீ எனில் அதன் பரப்பளவு__________

(i) 48 ச.செ.மீ (ii) 50 ச.செ.மீ (iii) 60 ச.செ.மீ (iv) 40 ச.செ.மீ

6. ஒரு சாய்சதுரத்தின் பரப்பளவு மற்றும் உயரம் முறையை 108 ச.செ.மீ மற்றும் 12 மீ எனில் அதன் அடிப்பக்கம் __________ஆகும்.

(i) 9 மீ (ii) 10 மீ (iii) 15 மீ (iv) 12 மீ

7. கீழுள்ள கூற்றுகளில் சாய்சதுரத்திற்குப் பொருந்தாதக் கூற்று எது?

(i) எல்லா பக்கங்களும் சமம் (ii) எதிர்பக்கங்கள் இணை

(iii) மூலைவிட்டங்கள் சமம் (iv)மூலைவிட்டங்கள்இரு சமக்கூறிடும்.

8. சரிவகத்திள் பரப்பளவு காணும் சூத்திரம்

(i) $a \times a$ ச.அலகுகள் (ii) $\frac{1}{2} \times d_1 \times d_2$ ச.அலகுகள்

(iii) $b \times h$ ச.அலகுகள (iv) $\frac{1}{2} \times h \times (a+b)$ ச.அலகுகள்

9. ஒரு சரிவகத்தின் இணைப்பக்கங்களின் கூடுதல் 25 செ.மீ மற்றும் அவற்றிற்கு இடைபட்ட தூரம் 8 செ.மீ எனில், அதன் பரப்பளவு __________

(i) 50 ச.அலகுகள் (ii) 56 ச.அலகுகள் (iii) 100 ச.அலகுகள்(iv) 40 ச.அலகுகள்

LIVEWORKSHEETS

10. ஒரு சரிவகத்தின் பரப்பளவு மற்றும் இணைப்பக்கங்களின் கூடுதல்கள் முறையே, 360 ச.மீ மற்றும் 45 மீ எனில், அதன் உயரம் _________

(i) 16 மீ (ii) 32 மீ (iii) 15 மீ (iv) 8 மீ

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. ஒரு இணைகரத்தில், அதன் எதிர்ப்பக்கங்கள் _________ மற்றும் ________

2. ஒரு சாய்சதுரத்தில் எல்லா பக்கங்களும் _____________

3. ஒரு இணைகரத்தில் அடிப்பக்கம் மற்றும் உயரம் முறையே 15செமீ மற்றும் 5 செமீ எனில், அதன் பரப்பளவு __________

4. சாய்சதுரத்தின் பக்க அளவு 8செமீ எனில், அதன் சுற்றளவு ________

5. ஒரு சாய்சதுரத்தின் அடிப்பக்கம் மற்றும் உயரம் முறையே 18 மீ மற்றும் 7 மீ எனில் அதன் பரப்பளவு ____________

**III. சரியா அல்லது தவறா எனக் கூறுக**

1. ஓர் இணைகரத்தில் அதன் மூலைவிட்டங்கள் சம அளவில் இருக்கும்.

2. ஒரு சாய்சதுரத்தில் அடுத்துள்ள பக்கங்களுக்கு இடைபட்ட கோணம் 90° ஆகும்.

3. ஒரு இரு சமபக்க சரிவகத்தில் இணையில்லா பக்கங்கள் சம அளவில் இருக்கும்

4. ஒரு இணைகரத்தில் எல்லாப் பக்கங்களும் சமம் எனில் அது சாய்சதுரம் ஆகும்

5. ஒரு இருசமபக்க சரிவகத்தை இரு சம அளவுள்ள முக்கோணங்களாகப் பிரிக்கலாம்

**IV. பொருத்துக**

1. இணைகரம் - $\frac{1}{2}\times d_1\times d_2$ ச.அலகுகள்.

2. சாய்சதுரம் - $\frac{1}{2}\times b\times h$ ச.அலகுகள்.

3. சரிவகம் - $b\times h$ ச.அலகுகள்.

4. முக்கோணம் - $\frac{1}{2}\times h\times(a+b)$ ச.அலகுகள்.

LIVEWORKSHEETS